**நிவித்திகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிவித்திகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த நிவித்திகல வாரந்த சந்தை மற்றும் பேரூந்து நிலையம் என்பன மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 78,223,877 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 27,725 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 06 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளுக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 12,549,287 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 74,841,186 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371 | 200,000 | ஹங்கமுவ லபுவத்த பன்சல வீதி கொங்கிறீட் இடும் வேலைக்காக 2010 பெப்ரவரி மாதம் வழங்கப்பட்டிருந்த முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 748,170 | 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் IV (ஆ) பகுதியின் 5(5) ஆவது உப விதி | - | மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட 09 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுமாறு அல்லது சட்டரீதியாக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் சபையினால் அந்த நிர்மாணங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - | கணனி மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2017 பெப்ரவரி 08 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சபரகமுவ மாகாண சபையின் மாகாண திறைசேரிச் சுற்றறிக்கை | 316,376 | உரிய பொருட்களுக்காக பதிவு செய்த வழங்குனர்கள் இருக்கும் போது பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,650,864 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,434,016 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,122,403 | 3,043,121 | 3,138,589 | 1,402,095 | 2,524,905 | 2,846,862 | 3,332,502 | 1,518,263 |
| வாடகை | 4,165,100 | 4,097,000 | 4,053,050 | 105,950 | 4,076,500 | 3,881,850 | 3,907,050 | 62,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 406,900 | 380,210 | 376,710 | 5,000 | 272,600 | 334,656 | 334,656 | 1,500 |
| ஏனைய வருமானம் | 14,435,800 | 14,977,031 | 10,213,649 | 14,157,014 | 10,432,983 | 10,748,111 | 7,125,533 | 9,393,632 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட 01 சதவீதத்ததால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 03 சதவீதம், 07 சதவீதம், 04 சதவீதம், 57 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதனவரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 805 ஆதனவரி அலகுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 1,166,947 ஆதனவரி மீதியொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்ததுடன் அந்த மீதியில் நிலுவைக் காலம் 05 வருடங்களை விட அதிகமான 198 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 471,188 மீதியொன்று காணப்பட்டது. அந்த நிலுவை ஆதனவரியை அறவிடுதல் தொடர்பாக சபையின் செயற்பாடுநிலை மந்த நிலையில் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 90,862 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 75,871 கூட்டுமொத்தம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்தது. உரிய நிலுவை வரியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**2.2.4 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 259,690 கூட்டுத்தொகையான வியாபார வரியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பாதாதைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 34,070 கட்டணம் 2018 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 முத்திரைக் கட்டணம்**

2015 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை முத்திரரைக் கட்டணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) உப விதி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்லல் மற்றும் அதற்கான கட்டணம் அறவிடப்படல் என்பன உப விதிகளுக்குரிய விடயமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் கழிவுப்பொருட்களை எடுத்துச் செல்லல் தொடர்பான கட்டணம் அறவிடுவதற்காக உப விதியொன்றை விதித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அமுல்படுத்தப்படாத இலக்குகள்**

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக மலசலகூட வசதிகளை வழங்குதல் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 55,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நலன்புரி நடவடிக்கைகள் எதவும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், ‘‘நிதி உதவியை வழங்குமாறு பிரதேச சபைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் மூலம் விடயப்பொறுப்பு

அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கோரிக்கைக்காக அங்கீகாரம் வழங்காமையினால் நலன்புரி நடவடிக்கைகள் செய்ய முடியாதிருந்ததாக'' கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக காணியொன்றைக் கைப்பற்றிக் கொள்ளத் தவறியமையின் காரணமாக கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்த ரூபா 150,766 கூட்டுத்தொகையான வீட்டு வாடகை உரிய வீட்டு உரிமையாளர்களுக்குச் செலுத்தாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் V ஆவது பட்டோலையின் பிரகாரம் தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களை நிர்மாணிக்கும் போது அறவிட வேண்டிய கட்டணங்களுக்கு முரணாக 06 தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து குறைவாகக் கட்டணம் அறவிடப்பட்டமை மற்றும் 03 தொலைபேசி கோபுரங்களிலிருந்து எந்தக் கட்டணமும் அறவிடப்படாமை என்பவற்றின் காரணமாக 2018 மே வரையிலும், ரூபா 1,201,200 அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 43,290 கூட்டுத்தொகையான பொல்வத்த கெபல வீதி உடைந்து சென்ற இடம் மற்றும் கலஉடவத்த வீதியில் உடைந்து சென்ற இடம் என்பவற்றை மீளமைப்பதற்காக 2017 பெப்ரவரி 22 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் வரையிலும், அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. உரிய மீளமைப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக அந்த வீதி மேலும், உடைந்து செல்லும் ஆபத்திற்குட்பட்டிருந்ததுடன், மீளமைப்பதற்காக அதிக கிரயமொன்றைச் செலவிடும் அபாயமும் காணப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபைக்குரிய மயான நிலங்களின் உரித்தைக் கையேற்கும் நடவடிக்கைகளுக்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 400,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவற்றைக் கையேற்பதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) விளைவற்ற சொத்துக்கள்**

கெப் வண்டியையும் உழவு இயந்திரமொன்றையும் பழுதுபார்ப்பதற்காக 2015 மே மாதத்தின் போது அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றதாகக் காணப்படுகின்ற அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது அவ்வாறு செய்ய முடியாதாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 33 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,391,167 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 21,819,346 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 80 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | (ii) வருமானங்கள் அதிகரித்து பதிவு செய்யப்பட்டமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்து பயன்பாடு | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | முறையான பிரகாரம் கழிவுப்பொருள் அகற்றப்படாமை |